அறிவிப்புகள்

விதியின் கீழ், பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை அலுவல் ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்—

1. மாண்புமிகு பேரவைத் தலைவர்.
2. மாண்புமிகு முதல் அமைச்சர்.
3. மாண்புமிகு பேரவை முன்னவர்.
4. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.
5. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.
6. திரு. மு. கருணாநிதி.
7. திரு. க. அன்பழகன்.
8. திரு. ஏ. ஆர். மாரிமுத்து.
9. திரு. என். சங்கரய்யா.
10. திரு. ஜே. ஜேம்ஸ்.
11. திரு. சோ. அழகர்சாமி.
12. திரு. ரா. மார்க்கபந்து.
13. திரு கே. கந்தசாமி.
14. திரு. எம். அப்துல் லத்திப்.
15. திரு. பி. கே. மூக்கையா தேவர்.
16. திரு. துரை. கோவிந்தராசன்.

பேரவைத் தலைவர் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவர் ஆவார்.

(3) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

தமிழ்நாடு 1977-ம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1977-ம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

(1) ஒழுங்குப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

(இ) சட்ட முன்வடிவுகளின் நகல் தமிழில் வழங்கப்படாதது குறித்து.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றத்தின் நடவடிக்கைகள்,

1977 ஜூலை 8]

தமிழில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் இந்த பில்லின் நகல் ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இனி மேலாவது தமிழில் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தச் சட்ட முன்வடிவை ஆங்கிலத்திலேயிருந்து தமிழில் சரியானபடி மொழிபெயர்க்கக் கூடிய அளவுக்கு நிலைமை இல்லை. கூடுமானவரையில் பேரவையின் நடவடிக்கைகள் தமிழிலேயே இருக்கவேண்டும் என்பதில் பேரவைத் தலைவர் பேரவா கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு முடியுமோ அந்த அளவுக்கு தலைவர் இந்த மன்றத்திலே தமிழுக்கு முதலிடம் தருவார் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, இதற்கு முன், சட்ட முன்வடிவு ஆங்கிலத்திலே இருப்பது நிறைவேற்றப் பட்டாலும், ஆங்கிலத்திலே கொடுக்கப்பட்டதை தமிழில் கொடுப்பது வழக்கமாக இருந்திருக்கிறது. சட்டமன்ற நடவடிக் கைகளை தமிழிலிலே நடத்த நல்ல அமைச்சர்கள் இருக்கிறார்கள். சட்டத் துறையிலேயும் தமிழிலே திறமை வாய்ந்த பலர் இருக் கிறார்கள். இங்கே தமிழ் தெரியாத பலர் இருக்கிறார்கள். (குறுக்கீடு) ஆங்கிலம் தெரியாத உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஆகவே, தமிழிலே கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

(முற்பகல் 9-20)

(3) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

தமிழ்நாடு 1977-ம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண் டாம் திருத்த) சட்டமுன்வடிவு—தொடர்ச்சி.

அரசினர் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் : நான் இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.